(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 2(5).] **பாராளுமன்றம்**

## 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2016 மார்ச்சு 24 வியாழக்கிழமை வெளியிடப்பட்டது

## 2016 ஏப்பிறல் 05, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

தகவலுக்கான உரிமை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*

நிதி அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை - தலைப்பு 240 - நிகழ்ச்சித் திட்டம் 2,— †இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்திற்குப் புறம்பாக அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினால் பெறப்பட்ட கடன் தொகையிலிருந்து 2016 சனவரி மாதம் 1 ஆம் திகதியுடன் ஆரம்பமாகி 2016 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் நிதியாண்டின் பயன்பாட்டிற்காக ஐம்பத்தைந்து மில்லியன் ரூபாவை (ரூபா. 55,000,000) விஞ்சாத தொகையொன்றினை அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு தயார்படுத்திக்கொள்ளல் வேண்டுமாக.

சேவைகள் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

(அ) 2015 நிதியாண்டின் நானாவித நிதியிலிருந்து 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 மற்றும் 11 ஆம் இலக்க முற்பணக் கணக்குகளைத் தீர்த்தல்.

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு | 240 | - | தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் |
| நிகழ்ச்சித் திட்டம் | 02 | - | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் |
| கருத்திட்டம் | 03 | - | கணக்கீட்டு உதவி |
| | | | மொத்தச் செலவினம் = ரூபா 55,000,000 |
| | | | (ஐம்பத்தைந்து மில்லியன் ரூபா மட்டும்) |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2016 மார்ச்சு மாதம் 24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2016 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க.

*

மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்,— இலங்கை அணுசக்தி சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி சட்டத்தின் கீழ் இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையினால் ஆக்கப்பட்டு 2015 யூலை 21 ஆம் திகதிய 1924/27 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் பிரசுரிக்கப்பட்டதும் 2016.03.23ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான 2015 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அணுசக்தி ஒழுங்குவிதிகள் (அனுமதிப் பத்திரம்) மற்றும் 2015 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அணு சக்தி (செயன்முறை மேற்கொள்வதற்கான எண்ணம் பற்றிய அறிவித்தல்) ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

# 2016 மே 03, செவ்வாய்க்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

129/ '15

கௌரவ புத்திக பத்திரண,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் ஆறுகளைச் சார்ந்ததாக அனுமதியற்ற மணல் அகழ்ந்தெடுத்தல், இரத்தினக்கல் அகழ்வு மற்றும் தங்க அகழ்வு நடைபெறுகின்றதென்பதையும்;

(ii) இதனால் ஆறுகளுக்கு பாரியளவில் சேதமேற்படுகின்றதென்பதையும்;

(iii) இது மக்கள் வாழ்க்கையிலும் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதையும்;

(iv) பொறுப்புக் கூறவேண்டிய நிறுவனங்களில் மேற்படி முறையற்ற செயற்பாடுகளைத் தடுக்க போதியளவு வசதிகள் இல்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆறுகளைச் சார்ந்ததாக இடம்பெறுகின்ற குறிப்பிட்ட முறையற்ற செயற்பாடுகளைத் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில் அந்நடவடிக்கைகள் யாவை;

(iii) 2013.01.01 ஆந் தேதியிலிருந்து 2014.06.30 ஆந் தேதி வரை (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட தவறுகள் தொடர்பாக கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாது;

(iv) அவை சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கைகள் ஒவ்வொரு முறைப்பாட்டுக்கிணங்க வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி சுற்றாடல் சேதங்களைத் தடுக்க தற்போது நிலவுகின்ற சட்டமுறைமை போதுமானதாக உள்ளதா;

(ii) இன்றேல், நிலவுகின்ற சட்டங்களை மாற்றியமைக்க அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

355/ '15

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வீடமைப்பு உள்ளிட்ட பொது வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமிர் இராச்சியத்தின் அபிவிருத்தி நிதியத்தினால் நிதி உதவி வழங்கப்பட்டதா என்பதையும்;

(ii) மேற்படி உதவித் தொகையைப் பயன்படுத்தி அமுல்படுத்தப்பட்ட வீடமைப்புக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு வீடமைப்புக் கருத்திட்டத்திற்கும் செலவிடப்பட்ட பணத் தொகைகள் தனித்தனியே யாது என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தை அமுல்படுத்தும்போது அனுசரணை வழங்கிய அரச நிறுவனங்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் ஒவ்வொரு கருத்திட்டத்திற்கும் அமைய தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

445/ '16

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2008 ஆம் ஆண்டில் முன்னாள் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நிதி அமைச்சரென்ற வகையில் அரச வங்கிகளிலிருந்து கூட்டுறவுத் துறைக்கு வழங்கியிருந்த அனைத்து கடன்களையும் பதிவழிப்பதற்கு நிதி ஏற்பாடுகளை ஒதுக்கியிருந்தாரா என்பதையும்;

(ii) அதை உறுதிபடுத்துகின்ற வகையில் அப்போதைய விடயத்திற்கு பொறுப்பான அமைச்சராகவிருந்த பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன 2015.11.05 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் கூற்றொன்றை விடுத்தாரா என்பதையும்;

(iii) ஒவ்வொரு கூட்டுறவு சங்கத்திலிருந்தும் பதிவழிக்கப்பட்ட கடன்களின் உண்மையான நிலை பற்றி அமைச்சருடன் கலந்துரையாடி அறிவிப்பதாக கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர் 2015.11.05 ஆம் திகதியன்று பாராளுமன்றத்திற்கு அறிவித்தாரா என்பதையும்;

(iv) மக்கள் வங்கியினால் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடனை பதிவழிப்பதற்கு தீர்மானித்திருந்த போதிலும் அத்தீர்மானம் இதுவரை எந்தவொரு மாவட்டத்திலும் அமுலாக்கப்படவில்லை என இராஜாங்க அமைச்சர் 2015.11.05 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் வழங்கிய விடை சரியானதா என்பதையும்;

(v) மேற்படி (iv) இல் உள்ள தீர்மானத்தை அமுல்படுத்தாமைக்கான காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கடன்களை பதிவழிப்பதன் மூலம் கூட்டுறவு சங்கங்களுக்கு ஒருவிதத்தில் ஊக்கமளிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் எதிர்கால நடவடிக்கைகளை கூட்டுறவு சங்கங்களுக்கு அறிவிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

448/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ அவர்கள்,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) சூரியவெவ சர்வதேச கிரிக்கெற் விளையாட்டரங்கு அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட திகதி யாது;

(ii) அன்றுதொட்டு இற்றைவரை மேற்படி விளையாட்டரங்கின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட பணத்தொகை ஒவ்வொரு வருடத்திற்கிணங்க தனித்தனியாக எவ்வளவு;

(iii) இவ்விளையாட்டரங்கு அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட தினத்திலிருந்து இற்றைவரை நடத்தப்பட்ட சர்வதேச கிரிக்கெற் போட்டிகளிலிருந்து ஈட்டிய வருமானம் தனித்தனியாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

453/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) தற்போது இலங்கை நடைமுறைபடுத்துகின்ற சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் மூலம் இழக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுகின்ற வரி வருமானமானது 2005 தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டின் பிரகாரம் தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) இந்திய – இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஆரம்பிக்கப்பட்ட திகதி தொடக்கம் இதுவரை சுங்கத் திணைக்களம் இழந்துள்ளதாகக் கருதப்படுகின்ற வரி வருமானம் எவ்வளவென்பதையும்;

(iii) இந்திய – இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொழிற்பட ஆரம்பித்த திகதி தொடக்கம் இதுவரை ஏற்றுமதி - இறக்குமதி மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக நிலுவைகள் பற்றிய சுங்கத் தரவுகள் ஒவ்வொரு ஆண்டின் பிரகாரம் தனித்தனியாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

467/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) 2001 முதல் 2016 வரை ஒவ்வொரு வருடமும் சனவரி முதலாம் திகதியில்,

(i) உலக சந்தையில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை டொலர்களில் மற்றும் ரூபாவில் எவ்வளவு என்பதையும்;

(ii) உள்நாட்டுச் சந்தையில் ஒரு லீற்றர் பெற்றோல் மற்றும் டீசலின் விலை ரூபாவில் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

494/ '16

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2015 ஆம் ஆண்டினுள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதித் திணைக்களத்தினால் காலம் கடந்த (overage) வாகனங்களை இறக்குமதி செய்ய வழங்கப்பட்டுளள உரிமப்பத்திரங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி உரிமப்பத்திர உரிமையாளர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் உரிமப்பத்திரம் வழங்கப்பட்ட வாகன வகைகள் தனித்தனியாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

511/ '16

கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமகி மாவத்தை, வெள்ளக்க, வெலிகமவைச் சேர்ந்த திரு. ஜே.ஜி. ஜயந்த 2000.07.26 அன்று இலங்கைப் போக்குவரத்துச் சபையில் நடத்துநராக இணைந்ததுடன், அக்குரஸ்ஸ பேருந்துச் சாலையில் பணியாற்றி, மருத்துவ காரணங்களின் நிமித்தம் 15 வருட கால குற்றமற்ற சேவைக்குப் பின்னர் 2015.01.01 அன்று நோயின் காரணமாக ஓய்வுபெற்றார் என்பதையும்;

(ii) ஓய்வு பெறும்போது அவருக்கு வழங்கப்பட வேண்டிய பணிக்கொடைக் கொடுப்பனவு உரிய அதிகாரிகளிடம் பல வேண்டுகோள்கள் செய்யப்பட்ட போதும் இதுவரைக்கும் செலுத்தப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பணிக்கொடைக் கொடுப்பனவு எவ்வி தாமதமின்றி முழுமையாக மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், எத்திகதியில் அது வழங்கப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

140/ '15

கௌரவ புத்திக பத்திறண,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டில் வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட மொத்தப் பணத்தொகை யாதென்பதையும்; அக்கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்திற்கும் ஏற்புடையதாக மதிப்பீடு செய்யப்பட்ட பணத்தொகை தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி நிதி பெற்றுக்கொள்ளப்பட்ட மூலங்கள் யாவையென்பதையும்;

(iv) அவ்வாறான ஒவ்வொரு மூலத்தினின்றும் பெறப்பட்ட பணத்தொகை தனித்தனியாக யாதென்பதையும்;

(v) பணம் பெற்றுக்கொள்ளப்பட்ட மூலத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட நிபந்தனைகள் தனித்தனியாக யாவையென்பதையும்;

அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) இந்த வீதி நிர்மாணிப்புக்களின் போது ஊழல், மோசடிகள் பல இடம்பெற்றுள்ளன என்பதையும்;

(ii) தரம் பற்றிய பிரச்சினைகள் உள்ளன என்பதையும்;

(iii) கருத்திட்டத்தினால் காணி மற்றும் ஆதனங்களை இழக்கும் மக்களுக்கு இழப்பீடு, ஏனைய நிவாரணங்கள் வழங்குதல் குறைந்த மட்டத்தில் காணப்படுகிறது என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள கருத்திட்டங்களினால் மக்களுக்கு இழப்பீடு மற்றும் ஏனைய நிவாரணங்களை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஒவ்வொரு கருத்திட்டத்திற்கும் அமைவாக தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) அபிவிருத்திக் கருத்திட்டங்களினால் பாதிக்கப்படும் மக்களுக்கு வழங்கும் நிவாரணங்களை அதிகரிக்க அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எவ்வாறு, எத்தேதியிலிருந்து செய்யப்படுமென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

449/ ’16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2014.12.14 ஆம் திகதி மாத்தறையில் நடைபெற்ற திறன் பாராட்டு நிகழ்ச்சித் திட்டத்துக்கு செலவழிக்கப்பட்ட மொத்தப் பணத்தொகை எவ்வவளவு என்பதையும்;

(ii) அதன்போது இடம்பெற்ற நிதி மோசடிகள் பற்றி கண்டறிவதற்காக தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் ஆரம்ப விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) JP/E/NAITA/AW/2014/20 ஆம் இலக்க கணக்காய்வு விசாரணையின் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி வெளிப்படுத்திய நிதி மோசடிகள் யாவை என்பதையும்;

(iv) இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்கு ரூபா 100 மில்லியனுக்கு அதிகமான தொகை செலவிடப்பட்டமை தொடர்பாக NAITA தலைவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு முறைப்பாடு செய்துள்ளாரா என்பதையும்;

(v) ஆமெனில், அது எந்த திகதியில் அதன் முன்னேற்றம் யாது என்பதையும்;

(vi) அரச அங்கீகரிக்கப்பட்ட பெறுகைகள் செயற்பாட்டுக்கு புறம்பாக லைட் ஹவுஸ் என்ற தனியார் கம்பனியைத் தெரிவு செய்யும் போது NAITA நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் மோசடி ஒன்றைப் புரிந்துள்ளதால் அவருக்கு எதிராக எடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(vii) சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லையெனில் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

454/ ’16

கௌரவ பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2005 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட செறிவு கூடிய மதுபானம் மற்றும் தானிய மதுபானத்தின் அளவு ஆண்டு வாரியாக தனித்தனியாக எத்தனை மில்லியன் லீற்றர்கள் என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட ஆண்டுகளில் சொல்லப்பட்டுள்ள மதுபான வகை இரண்டிலுமிருந்து பெறப்பட்ட மதுவரி வருமானம் வருட வாரியாக தனித்தனியாக எத்தனை மில்லியன் ரூபா என்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டில் செறிவு கூடிய மற்றும் தானிய மதுபான உற்பத்தி அதிகரிப்பதற்கு ஏதுவான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

469/ '16

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— சட்டமும், ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) கொழும்பு 15, மட்டக்குளி, 1 ஆம் ஒழுங்கை, கதிரானவத்தை, இலக்கம் 1/90டி எனும் முகவரியில் வசிக்கின்ற, திரு எம்.என்.எம். ஹக்கீம் (தே.அ.இல. 820881966V) 2009.03.21 ஆம் திகதி கொழும்பு, முகத்துவாரம் பொலிஸ் ஆளுகைப் பிரதேசத்தில் அவரின் 200-5464 ஆம் இலக்க முச்சக்கர வண்டியுடன் கடத்திச் செல்லப்பட்டமை தொடர்பாக அவரின் சகோதரரான திரு. மொஹமட் பர்சான், முகத்துவாரம் பொலிஸ் நிலையத்தில் 2009.03.21 ஆம் திகதி CIB/83/371 ஆம் இலக்கத்தின் கீழ் முறைப்பாடு செய்துள்ளார் என்பதையும்;

(ii) பொலிஸ் தலைமையகத்தின், சிவில் குற்றப் பிரிவினால் C8/310/2010 ஆம் இலக்க 2010.08.05 ஆம் திகதிய கடிதம் மூலம், மேற்படி கடத்தல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் பொருட்டு கொழும்பு மாவட்டத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மாஅதிபருக்கு சாட்டப்பட்டதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி இலக்கத்தின் கீழ் முகத்துவாரம் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாடு மற்றும் பிரதிப் பொலிஸ் மாஅதிபரின் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகளின் தற்போதைய முன்னேற்றம் யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

472/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வ/ப ஸ்ரீ லங்கன் எயார் லைன் கம்பனி விமானப் பயணங்களின் மூலம் நட்டமடைகின்ற அதேவேளை உணவு வழங்கல், பொறியியல் சேவைகள் மற்றும் விமான நிலையங்கள் சேவை ஆகிய துறைகளில் இலாபம் ஈட்டுகின்றதென்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(ii) விமானப் பயணச் சேவையை தொடர்ந்தும் வ/ப ஸ்ரீ லங்கன் எயர் லைன் கம்பனியிடம் தக்கவைத்துக்கொண்டு மேலே (i) இல் குறிப்பிடப்பட்ட ஏனைய துறைகளை விற்பனை செய்வதற்கான திட்டமொன்று உள்ளதா;

(iii) ஆமெனில், அதன் மூலமாக கம்பனியின் நட்டம் மேலும் அதிகரித்து திறைசேரி மீதுள்ள அழுத்தம் அதிகரித்தலே இடம்பெறுமென்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(iv) ஸ்ரீ லங்கன் விமானச் சேவையை விற்பனை செய்வதற்கான திட்டமொன்று உள்ளதா;

(v) ஆமெனில், அத்திட்டத்தின் முன்னேற்றம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2016 மே 04, புதன்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

106/ '15

கௌரவ புத்திக பத்திறண,— வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2010.01.01 ஆம் திகதி தொடக்கம் 2014.12.31 ஆம் திகதி வரையிலான ஐந்தாண்டு காலப் பகுதியில் தென்கொரியா மற்றும் மலேசியாவில் மரணித்த இலங்கைப் பிரசைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு நாட்டின்படி தனித்தனியாக எத்தனையென்பதையும்,

(ii) இவர்களது பெயர், வயது, இலங்கையில் வசித்த முகவரி மற்றும் மேற்படி நாடுகளில் புரிந்த தொழில் யாவையென்பதையும்,

(iii) இந்த ஆட்களின் மரணங்களுக்கான அண்மித்த காரணங்கள் யாவையென்பதையும்,

(iv) இவர்கள் சார்பாக அரசாங்கம் வழங்கியுள்ள நிவாரணங்கள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2010.01.01 ஆம் திகதி தொடக்கம் 2014.12.31 ஆம் திகதி வரையிலான ஐந்தாண்டு காலப் பகுதியில் தென்கொரியா மற்றும் மலேசியாவில் முழுமையாக அல்லது பகுதியளவில் அங்கவீன நிலைமைக்கு உள்ளாகிய இலங்கைப் பிரசைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு நாட்டின் பிரகாரம் தனித்தனியாக எத்தனையென்பதையும்,

(ii) இவர்களது பெயர், வயது, இலங்கையில் வசித்த முகவரி மற்றும் மேற்படி நாடுகளில் மேற்கொண்ட தொழில் யாவையென்பதையும்,

(iii) இவர்கள் அங்கவீனமடைந்ததற்கான காரணங்கள் யாவையென்பதையும்,

(iv) இவர்கள் சார்பாக அரசாங்கம் வழங்கியுள்ள நிவாரணங்கள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

236/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2015 ஆம் ஆண்டின் சனாதிபதித் தேர்தலை அடிப்படையாகக் கொண்டு வாழ்வின் எழுச்சி திணைக்களத்தின் மூலம், முன்னாள் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் புகைப்படத்துடன் கூடிய 50 இலட்சம் பஞ்சாங்கங்கள் அச்சிடப்பட்டு ரூபா 29,400,000 பணத் தொகை முறைகேடாக பயன்படுத்தப் பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2015 ஆண்டுக்காக 18 இலட்சம் சமுர்த்தி பெறும் குடும்பத்தினரிடையே விநியோகிப்பதற்கு 50 இலட்சம் பஞ்சாங்கங்கள் அச்சிடப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) குறித்த செலவை அங்கீகரித்த அதிகாரி யாரென்பதையும்;

(iii) இவருக்கு மேற்படி பணத் தொகையை அங்கீகரிக்கும் அதிகாரம் உள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி 50 இலட்சம் பஞ்சாங்கங்களை அச்சிட்ட நிறுவனம் யாதென்பதையும்;

(v) அதன் பொருட்டு கொள்வனவு நடைமுறை பின்பற்றப்பட்டதா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) வாழ்வின் எழுச்சி நிதியத்தின் நிதியை தமது கட்சியின் தேர்தல் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தியதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட நிதி முறைகேடாகப் பயன்படுத்தல் தொடர்பாக நிதிசார் குற்றப் புலனாய்வுப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் புலனாய்வின் முன்னேற்றம் யாதென்பதையும்;

(ii) ஏற்புடைய திணைக்களம் அல்லது அமைச்சு மேற்படி நிதி முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டமை தொடர்பாக புலனாய்வொன்றை மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதன்போது மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை யாதென்பதையும்;

(iv) இதற்கான செலவு வாழ்வின் எழுச்சி நிதியத்திலிருந்து ஏற்கப்பட்டிருப்பின், ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

364/'15

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 யூலை மாதம் தம்புள்ளையில் நடைபெற்ற இந்திய – இலங்கை கிரிக்கட் போட்டியின் போது, யூலை 18 ஆம் திகதி இரவு இந்திய விளையாட்டு வீரர் ஒருவர் தங்கியிருந்த கண்டலம ஹோட்டல் அறைக்கு ஒரு பெண் சென்றுள்ளார் என்பதையும் அவர் அங்கு விடியும் வரை தங்கியிருந்தார் என்பதையும்;

(ii) இது தொடர்பாக அப்போதைய கிரிக்கட் விளையாட்டு பாதுகாப்பு உத்தியோகத்தர் அப்போதைய கிரிக்கட் செயலாளருக்கு பிரதியொன்றுடன் கூடியதாக இந்திய முகாமையாளருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார் என்பதையும்;

(iii) இக்கடிதத்தின் உள்ளடக்கத்தின் படி இலஞ்சம் வழங்கும் முயற்சியொன்று இருந்துள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இது தொடர்பாக,

(i) போட்டித் தொடரை ஏற்பாடு செய்த நாட்டின் கிரிக்கட் செயலாளரினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை;

(ii) சர்வதேச கிரிக்கட் கவுன்சில் மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் எழுத்து மூல அறிக்கைகள் இலங்கை கிரிக்கட் நிறுவனத்திடம் உள்ளதா;

(ii) ஆமெனில் அவற்றை சமர்ப்பிப்பாரா;

(iii) இன்றேல் இவ்வறிக்கைகள் அழிக்கப்பட்டமை தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யாவர்;

(iv) அறிக்கைகள் அழிக்கப்பட்டமை தொடர்பாக விசாரணையை ஆரம்பிப்பாரா;

(v) அவ்விசாரணையில் இலங்கை கிரிக்கட் நிறுவனத்தில் பதவி வகிப்பவர் ஒருவர் குற்றவாளியாகக் காணப்படின் அவரை பதவியிலிருந்து நீக்குவாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

378/ '15

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அப்போதைய தேசிய வீடமைப்பு திணைக்களத்தினால், 1984.01.01 ஆம் திகதி, கண்டி மாவட்டத்தில் அக்குரணை பிரதேச செயலாளர் பிரிவில், ரம்புக்கேஎல, பன்சல்தன்னவத்த வீடமைப்பு திட்டத்தின் கீழ் தகைமை பெற்ற ஆட்களுக்கு குடியிருப்பதற்காக காணித் துண்டுகள் வழங்கப்பட்டன என்பதையும்;

(ii) இற்றைக்கு இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் அளிப்புப் பத்திரங்களை வழங்கும் அடிப்படையில் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட காணித் துண்டுகளில் குடியமர்ந்துள்ளவர்களுக்கு நிரந்தர உறுதிகளை வழங்குதல் இதுவரை நடைபெறவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி குடியிருப்பாளர்களின் காணிகளுக்கு துரிதமாக உறுதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

417/ '16

கௌரவ பிரசன்ன ரணதுங்க,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.01.08 ஆம் திகதி தொடக்கம் 2015.12.31 ஆம் திகதி வரை அரச ஊழியர்களுக்கு, கலைஞர்களுக்கு மற்றும் வர்த்தகர்களுக்கு எதிராக பொலிஸ் நிதிசார் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு (FCID) கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குற்றச்சாட்டுக்கு இலக்காகியுள்ள அரச ஊழியர்களின், கலைஞர்களின் மற்றும் வர்த்தகர்களின் பெயர்களை வெவ்வேறாக சபையில் சமர்ப்பிப்பாரா;

(iii) பொலிஸ் நிதிசார் குற்றப் புலனாய்வுப் பிரிவினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள அரச ஊழியர்களின், கலைஞர்களின் மற்றும் வர்த்தகர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

(iv) இவ்விசாரணைகளின் முன்னேற்றம் வெவ்வேறாக யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

422/ '16

கௌரவ விஜித ஹேரத்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 சனாதிபதித் தேர்தலின்போது அரச ஊழியர்களுக்கு வழங்குவதாக வாக்குறுதியளிக்கப்பட்ட ரூபா 10,000/- பணத் தொகையில் பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 5/2015 இன் பிரகாரம் அரசாங்க, கூட்டுத்தாபனங்கள், சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பனிகள் என்பவற்றுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட ரூபா 8000/- தொகையானது அரச கருத்திட்டங்களின் பணியாட்டொகுதியினருக்கு கிடைக்கவில்லை என்பதையும்;

(ii) முன்னைய சம்பள அதிகரிப்புக்களின்போது கருத்திட்டங்களின் ஊழியர்களுக்கும் அச்சம்பள அதிகரிப்புக்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு நிதி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி அ (i) இன் பிரகாரம் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டு 10 மாதங்கள் கடந்துள்ள நிலையிலும், கருத்திட்ட பணியாட்டொகுதியினருக்கு அது வழங்கப்படாமை தொடர்பில் ஏதுவாயமைந்த காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி சம்பள அதிகரிப்பை கருத்திட்ட ஊழியர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) உரிய சம்பள அதிகரிப்பை அரச கருத்திட்டப் பணியாட்டொகுதியினருக்கு துரிதமாகப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) தற்போது 02 வருடங்களாக இடைநிறுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்களுக்குரியதாக தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச முகாமைத்துவச் சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை நடைமுறைப்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

428/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் இலங்கை மத்திய வங்கியினால் கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களின் பெறுமதி தனித்தனியே யாது என்பதையும்;

(ii) இலங்கை மத்திய வங்கி திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்கின்ற போது புதிய நாணயத்தாள்கள் நிதிச் சுற்றோட்டத்தில் சேர்க்கப்படுவதன் மூலம் பணவீக்கம் அதிகரிக்கும் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

436/ '16

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) இலங்கை மின்சார சபையில் இருபது ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவைக்காலத்தை பூர்த்தி செய்து 55 வயதை தாண்டியுள்ள ஊழியர்களுக்கு ஓய்வூதியம் கிடைக்கின்றதென்பதையும்;

(ii) அவ்வாறு ஓய்வு பெறும் ஊழியர்களுக்கு அவர்கள் உயிருடன் இருக்கும் காலம் வரை மாத்திரமே ஓய்வூதியம் கிடைக்குமென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஏதேனும் காரணத்தினால் ஓய்வுபெற்றவர் மிகக் குறுகியதொரு காலப் பகுதியில் உயிரிழப்பாரெனில், எவ்வித ஆதரவுமின்றி நிர்க்கதி நிலைக்கு தள்ளப்படும் இவருடைய வாழ்க்கைத் துணைக்கும் பிள்ளைகளுக்கும் மேற்படி ஓய்வூதிய அனுகூலங்களை வழங்க முடியாதா என்பதையும்;

(ii) இதற்காக மேற்படி ஓய்வூதிய முறையில் மாற்றம் கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2016 மே 05, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

9/ '15

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2015.08.18 ஆம் திகதி காலி துறைமுகப் பொலிசாரினால் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வின் போது நிறுத்திவைக்கப்பட்டிருந்த 'மஹநுவர' எனும் கப்பலினுள்ளும் இலங்கை தென்னக கப்பல் வளாகத்தினுள்ளும் மற்றும் அதன் சேவா வனிதா அலகுக்குச் சொந்தமான கட்டடத்தினுள்ளும் ஆயுதங்கள் மற்றும் ரவைகள் இருந்து கண்டுபிடிக்கப்பட்டமையினை அவர் அறிவாரா?

(ஆ) (i) பொலிசாரினால் கண்டுபிடிக்கப்பட்ட ஆயுதங்கள் மற்றும் ரவைகளின் சட்ட ரீதியான உரிமையை எவரேனும் நபர் ஒருவர் அல்லது நிறுவனம் ஒன்று கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி ஆயுதங்கள் எவரேனுமொரு ஆளுக்கு அல்லது ஏதேனுமொரு நிறுவனத்திற்கு எச்சட்டத்தின் கீழ் கையளிக்கப்பட்டிருந்தன என்பதையும்;

(iii) ஆமெனில், இதற்கு அதிகாரம் வழங்கிய அதிகாரி யார் என்பதையும்;

(iv) மேற்படி ஆயுதங்களை உற்பத்தி செய்த நாடு, ஆண்டு மற்றும் பெற்றுக் கொண்டுள்ள உரிமப்பத்திரம் ஆகியவை யாவை என்பதையும்;

(v) ஆயுதங்கள் எந்த வழிமுறையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்பதையும் அதற்காக செலவிடப்பட்டுள்ள பணத்தொகை யாது என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி மிதக்கும் ஆயுதக் களஞ்சியத்தை துறைமுக வளாகத்தில் பேணிச் செல்வதற்கு அனுமதியுள்ளதா;

(ii) இதற்கான அனுமதியை வழங்கியுள்ள அதிகாரி யார்;

(iii) இதன் சார்பில் அவென்கார்ட் நிறுவனம் ஏதேனும் பணத்தொகையை செலுத்துகின்றதா;

(iv) ஆமெனில், அப்பணத் தொகை எவ்வளவு;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மேற்படி சம்பவங்கள் தொடர்பில் சட்ட மாஅதிபர் வழங்கியுள்ள முடிவுகளை விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் நீர் ஏற்றுக்கொள்வீரா;

(ii) இது தொடர்பில் பாராளுமன்றக் குழுவொன்றை நியமிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

95/ '15

கௌரவ புத்திக பத்திறண.— வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சேனைப் பயிர்செய்கை, விலங்குகளை வேட்டையாடுதல் அத்துடன் பல்வேறு அவிவிருத்தி திட்டங்கள் காரணமாக வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்குரிய வனங்களுக்கு சேதம் விளைகின்றதென்பதையும்;

(ii) உயர் அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளின் தலையீடு காரணமாக இத்தகைய சேதங்களை தடுத்து நிறுத்த இயலாதுள்ளதென்பதையும்;

(iii) மேற்படி வனங்கள் சேதமடைதலானது முழுமொத்த இலங்கையிலும் காலநிலை, பொருளாதார மற்றும் சமூக ரீதியிலான தாக்கங்களை விளைவிக்கின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) கடந்த இரண்டு ஆண்டு காலத்தினுள் இக்காடுகளில் வேட்டையாடுதல் மற்றும் சேனைப் பயிர்செய்கையில் ஈடுபடுதல் தொடர்பாக சட்டத்தின் முன் தவறாளிகளாகியவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஒதுக்கங்களில் வேட்டையாடுவதையும் சேனைப் பயிர்செய்கைகளில் ஈடுபடுவதையும் நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஒதுக்கங்களின் பாதுகாப்பிற்காக தற்போதுள்ள மனித மற்றும் பௌதீக வளங்கள் பற்றி திருப்தியடைகின்றாரா என்பதையும்;

(ii) இன்றேல், ஒதுக்கங்களின் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

311/ '15

கௌரவ ஜே. எம். ஆனந்த குமாரசிறி,— கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2000.11.29 ஆந் திகதி திருகோணமலை பிரதேச கடல் எல்லையில் பயங்கரவாதத் தாக்குதலுக்கு இலக்காகி "துஷாரி" எனப்படும் மீன்பிடிப் படகு அழிவடைந்து, அதிலிருந்த மீனவர்கள் காணாமற்போனார்கள் என்பதையும்;

(ii) கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் திரு. ஜீ. பியசேன, தமது ධිජදෙ/සැ/02/06ඕආර් ஆம் இலக்க 2003.01.10 ஆம் திகதிய கடிதத்தில், மேற்படி சம்பவம் உண்மையானதெனவும், குறிப்பிட்ட மீனவர்களின் தங்கிவாழ்வோருக்கு நஷ்டஈடு வழங்குவது உகந்ததெனவும் ஏற்றுக்கொண்டுள்ளார் என்பதையும்;

(iii) காணாமற்போயுள்ள மீனவர்களில் குமாரகே தொன் பியரத்ன என்பவருக்கு இதுவரையில் நஷ்டஈடு அல்லது மரணச் சான்றிதழ் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) திரு. பியரத்னவின் விதவையான மனைவி, திருமதி கே.எம். பிரிஜெட் காந்தி, முன்னாள் சனாதிபதி மற்றும் முன்னாள் அமைச்சருக்கு எழுத்து மூலமாக மேன்முறையீட்டை சமர்ப்பித்த போதிலும், இது தொடர்பில் நியாயமான நடவடிக்கையெதுவும் மேற்கொள்ளப்படாமை பாரியதோர் அநீதியாகும் என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) ஆமெனில், இவருக்கு நஷ்டஈடு செலுத்துவதற்கும், மரணித்த கணவருடைய மரணச் சான்றிதழை வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

328/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2018 பொதுநலவாய நாடுகளின் விளையாட்டு விழாவை இலங்கைக்குப் பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட முன்கூடிய பிரச்சார மற்றும் ஏனைய பணிகளுக்காக கடந்த அரசாங்கத்தின் தலையீட்டுடன் பணம் சேகரிக்கப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறு சேகரிக்கப்பட்ட பணத்தைப் பயன்படுத்தி மேற்கிந்தியத் தீவுகள், St. Kitts மற்றும் Nevis ஆகிய இடங்களுக்கு சுற்றுப்பயணங்கள் ஒழுங்கு செய்யப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதில் பங்கேற்றவர்களின் பெயர்கள் மற்றும் செலவிடப்பட்ட மொத்தத் தொகை யாது என்பதையும்;

(iii) இந்தப் பணத்தைப் பயன்படுத்தி கொடுப்பனவுகளைச் செய்துள்ள ஆட்களின் பெயர்கள் மற்றும் செலுத்தப்பட்ட தொகைகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iv) இது தொடர்பாக நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள முறைப்பாட்டின் புலனாய்வு அறிக்கையை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

332/ '15

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சுனாமியால் இடம்பெயர்ந்த குடும்பங்கள் மீள குடியமர்த்தப்பட்ட சிறிபோபுர கிராமத்தில் (சுசீ கிராமத்தில்) வசிக்கும் முஸ்லிம் பிள்ளைகளுக்கு ஆரம்பக் கல்வியைக் கற்பதற்கு தமிழ் மொழி மூல ஆரம்ப பாடசாலையொன்றை நிறுவுவது பொருத்தமானதென அம்பாந்தோட்டை கல்வி வலய உட்கட்டமைப்புக் குழு 2009.04.29 ஆம் திகதி தீர்மானமொன்றை எடுத்துள்ளதென்பதையும்;

(ii) இதன்படி அம்பாந்தோட்டை வலயப் பணிப்பாளரின் இலக்கம் ஹ/ஹம்/கலாப/செவி/01/வியூக/08 மற்றும் 2009.04.29 ஆந் திகதிய சிபாரிசு, தென் மாகாண கல்விப் பணிப்பாளரினால் தனது இலக்கம் தப/செவி/01 மற்றும் 2009.06.29 ஆந் திகதிய கடிதம் மூலம் மாகாண கல்வி செயலாளரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே (அ) (ii) இல் குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை மற்றும் அதன் முன்னேற்றம் யாது என்பதையும்;

(ii) அங்கீகரிக்கப்பட்ட முன்மொழிவு இதுவரை நடைமுறைப்படுத்தப்படாமைக்கு ஏதுவாயமைந்த காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) இது தொடர்பாக நிரல் அமைச்சு மூலம் ஆராய்ந்து பார்த்து அது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

340/ '15

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) லிட்றோ கேஸ் கம்பனியையும் லங்கா ஹொஸ்பிட்டல்சையும் (Lanka Hospitals) தனியார்மயமாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதா;

(ii) இலாபமீட்டுகின்ற அரசாங்க நிறுவனங்களை தனியார்மயமாக்க அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

371/ '15

கௌரவ ரி. ரஞ்ஜித் த சொய்ஸா,— கல்வி அமைச்சரைக்கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போது நாட்டின் ஒவ்வொரு மாகாண சபை ஆளுகைப் பிரதேசத்தினுள்ளும் உள்ள பதிவு செய்யப்பட்ட மொத்த முன்பள்ளிகளின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) மேற்படி முன்பள்ளிகளில் 50 பிள்ளைகளுக்கு மேலுள்ள முன்பள்ளிகளின் எண்ணிக்கை எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015 பெப்புருவரி மாதம் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் மூலம் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள ரூபா 250/= கொடுப்பனவை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு;

(ii) மேற்படி கொடுப்பனவை பெறுவதற்கு தகைமை பெற்றுள்ள முன்பள்ளி ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(iii) தற்போது மேற்படி மாதாந்தக் கொடுப்பனவு ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

377/ '15

கௌரவ பிரசன்ன ரணதுங்க,— உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2011ஆம் ஆண்டில் மேல் மாகாண சபையினால் பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்களை வழங்குவதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் தோற்றிய பட்டதாரிகளின் எண்ணிக்கை யாது;

(ii) சித்தியடைந்த பட்டதாரிகளின் எண்ணிக்கை யாது;

(iii) சித்தியடைந்த அனைவருக்கும் தற்போது நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளனவா;

(iv) இன்றேல், ஏன்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2014.12.27 இல் மேல் மாகாண சபையினால் பட்டதாரிகளை ஆசிரிய சேவைக்கு ஆட்சேர்ப்பதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு தோற்றிய பட்டதாரிகளின் எண்ணிக்கை யாது;

(ii) சித்தியடைந்த பட்டதாரிகளின் எண்ணிக்கை யாது;

(iii) இது வரை வழங்கப்பட்டுள்ள நியமனங்களின் எண்ணிக்கை யாது;

(iv) நியமனங்கள் வழங்கப்படவில்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை;

(v) இவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேலே அ (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையில் ஆசிரிய நியமனங்களை பெறுவதற்குத் தேவையான தகைமைகளை பூர்த்தி செய்யாத பட்டதாரிகளுக்கு, மேல் மாகாண சபையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனங்கள் வழங்கப்பட்டமையை அறிவாரா;

(ii) மேலே ஆ (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையில் சித்தியடையாத பட்டதாரிகளையும் இவ்வாறே மேல் மாகாணத்தின் அரசாங்க நிறுவனங்களில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

(iii) இன்றேல், ஏன்;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

404/ ' 16

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கல்வி அமைச்சினால் செயற்படுத்தப்படுகின்ற "அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" கருத்திட்டத்தின் கீழ் பாடசாலைகளை தேர்ந்தெடுப்பதற்கு பயன்படுத்தப்பட்ட அளவுகோல்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் நாவலப்பிட்டி தேர்தற்றொகுதியின், கங்க இஹல கோரளே மற்றும் பஸ்பாகே கோரளே கல்விக் கோட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பாடசாலைகள் யாவையென்பதையும்;

(iii) கம்பளை கல்வி வலயத்தினாலும் கல்வி அமைச்சினாலும் அளவுகோல்களின் பிரகாரம் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகள் கல்வி அமைச்சரின் தலையீட்டின் மூலம் மாற்றப்பட்டுள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கல்வி அமைச்சரின் தலையீட்டின் மூலம் புதிதாக பெயரிடப்பட்டுள்ள இரண்டு பாடசாலைகளும் அ(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்களின் பிரகாரமா தேர்ந்தெடுக்கப்பட்டன என்பதையும்,

(ii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

107/ '15

கௌரவ புத்திக பத்திரண,— வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010.01.01 ஆம் திகதி தொடக்கம் 2014.12.31 ஆம் திகதி வரையிலான ஐந்தாண்டு காலப் பகுதியில் மத்திய கிழக்கு பிராந்தியத்திலுள்ள நாடுகளில் மரணித்த இலங்கைப் பிரசைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு நாட்டின்படி தனித்தனியாக எத்தனையென்பதையும்,

(ii) இவர்களது பெயர், வயது, இலங்கையில் வசித்த முகவரி மற்றும் மேற்படி நாடுகளில் புரிந்த தொழில் யாவையென்பதையும்,

(iii) இந்த ஆட்களின் மரணங்களுக்கான அண்மித்த காரணங்கள் யாவையென்பதையும்,

(iv) இவர்கள் சார்பாக அரசாங்கம் வழங்கியுள்ள நிவாரணங்கள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2010.01.01 ஆம் திகதி தொடக்கம் 2014.12.31 ஆம் திகதி வரையிலான ஐந்தாண்டு காலப் பகுதியில் மத்திய கிழக்கு பிராந்தியத்திலுள்ள நாடுகளில் முழுமையாக அல்லது பகுதியளவில் அங்கவீன நிலைமைக்கு உள்ளாகிய இலங்கைப் பிரசைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு நாட்டின் பிரகாரம் தனித்தனியாக எத்தனையென்பதையும்,

(ii) இவர்களது பெயர், வயது, இலங்கையில் வசித்த முகவரி மற்றும் மேற்படி நாடுகளில் மேற்கொண்ட தொழில் யாவையென்பதையும்,

(iii) இவர்கள் அங்கவீனமடைந்ததற்கான காரணங்கள் யாவையென்பதையும்,

(iv) இவர்கள் சார்பாக அரசாங்கம் வழங்கியுள்ள நிவாரணங்கள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

344/ '15

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) வட மாகாணத்தில் முலங்காவில், நாச்சிக்குடா, கிளிநொச்சி, கிளி/அரச முஸ்லிம் கலவன் பாடசாலையில்,

(i) ஆரம்ப வகுப்புக்கள் தொடக்கம் க.பொ.த. (சாதாரண தரம்) வரை சுமார் 500 மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள் என்பதையும்;

(ii) தகுந்த கட்டட வசதிகள் இன்மையினால் தற்காலிக தகர கொட்டிலில் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன என்பதையும்;

(iii) ஆங்கிலம், புவியியல், அரபு மொழி, இஸ்லாம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாடசாலைக்கு வகுப்பறைக் கட்டடமொன்றையும் மேலே அ (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்கு ஏற்புடைய ஆசிரியர்களையும் தாமதமில்லாமல் வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

376/ '15

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) CSN அலைவரிசை பதிவு செய்யப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி அலைவரிசை பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி யாதென்பதையும்;

(iii) அதன் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iv) 2012 - 2015 ஆண்டு வரை கிரிக்கெற் போட்டிகளின் ஒளி/ஒலி பரப்பு உரிமையை பெற்றுக்கொள்வதற்காக CSN அலைவரிசை செலுத்தியுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(v) 2005 - 2011 ஆண்டு வரை கிறிக்கெற் போட்டிகளின் ஒளி/ஒலிபரப்பின் மூலமாக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஈட்டிக்கொண்டுள்ள வருடாந்த வருமானம் தனித்தனியாக யாதென்பதையும்;

(vi) 2011 ஆகஸ்ட் / செத்தெம்பர், அவுஸ்திரேலிய கிரிக்கெற் குழுவின் இலங்கைக்கான சுற்றுப்பயணத்தின்போது கிரிக்கெற் போட்டிகளின் ஒளி/ ஒலி பரப்பு உரிமைக்காக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் விண்ணப்பிக்காதிருந்தமைக்கான காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2016 மே 06, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

108/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) இலங்கையில் தற்போது பேணிவரப்படுகின்ற சினிமா மண்டபங்களின் எண்ணிக்கை யாது;

(ii) இலங்கையில் தற்போது இயங்கி வருகின்ற சினிமா சபைகளின் எண்ணிக்கை யாது; அவற்றின் பெயர்கள் யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு சபைக்கும் உரிய சினிமா மண்டபங்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது;

(iv) திரைப்படம் எச்சபைக்கு உரியதாக அமைதல் வேண்டுமெனத் தீர்மானிக்கின்ற முறையியல் யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) திரைப்படமொன்று திரையிடப்பட வேண்டிய சினிமா மண்டபங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பது பற்றிய திட்டவட்டமான பெறுமானமொன்று உள்ளதா;

(ii) ஆமெனில், அப்பிரதிகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி திட்டவட்டமான வரையறையினை மீறிச்செல்கின்ற சந்தர்ப்பங்கள் உள்ளனவா;

(iv) ஆமெனில், அவ்விதமாக திட்டவட்டமான பிரதிகளின் எண்ணிக்கையை விஞ்சியதாக திரைப்படமொன்றை திரையிடக்கூடிய முறையியல் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஒரு தயாரிப்பாளருக்கு அதிக வாய்ப்பினை வழங்குவதனால் மற்றுமொரு தயாரிப்பாளருக்கு அநீதி ஏற்படுகின்றதென்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(ii) ஆமெனில், தயாரிப்பாளர்கள் அனைவருக்கும் நியாயமான பிரதிகளின் எண்ணிக்கையை திரையிடுவதற்கு அனுமதி வழங்க மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

153/ '15

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) தோட்டப்புற தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்கு பாடசாலைகளின் அடிப்படையில் ஆசிரிய உதவியாளர்களை ஆட்சேர்ப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டதையடுத்து, அகலவத்தை, வியன்கல்ல, 25 /2 ஆம் இலக்க வீட்டில் வசிக்கும் திருமதி. எவ். ருஷானா மபூர் விண்ணப்பப் பத்திரமொன்றைச் சமர்ப்பித்தார் என்பதையும்;

(ii) அதன் பிரகாரம் அவர் நேர்முகப் பரீட்சையின் நிமித்தம் 2015.03.02 ஆம் திகதி அழைப்பு இக்கம் 199 (B) யின் கீழ் தோற்றினார் என்பதையும்;

(iii) இவர் வசிக்கும் பிரதேசத்தின் தோட்டப்புற பாடசாலைகளில் மேற்படி பதவிக்கான வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் திருமதி. ருஷானா மபூருக்கு இதுவரை ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இவருக்கு ஆசிரிய உதவியாளர் நியமனத்தைத் தாமதமின்றி பெற்றுக்கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

192/ '15

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) ஹோமாகம, தியகம, மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்திற்குரிய நிலப்பகுதியின் பரப்பளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி நிலப்பகுதி சொந்தமாக இருந்த அரசாங்க நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நிலப்பகுதி, விளையாட்டுத்துறை அமைச்சினால் அல்லது வேறு அரச நிறுவனத்தினால் சுவீகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கு ஏற்புடைய ஆவணங்களை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) தற்போது விளையாட்டு மைதானத்தின் நிர்வாகம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்பவர்கள் யாவரென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்;

(ii) அரசாங்கம் செலவிட்டுள்ள பணத்தொகை மற்றும் தனியார் நன்கொடைகள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) இதற்கு நிதி ஒதுக்கீடு செய்த அமைச்சுகள் யாவையென்பதையும்;

(iv) நிர்மாணிப்புகளுக்காக பணம் வழங்கியுள்ள தனியார் நன்கொடையாளர் களின் பெயர் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(v) விளையாட்டு மைதானத்தை விளையாட்டுப் பணிகளுக்காக வழங்குதல் ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் இற்றைவரை அறவிடப்பட்டுள்ள பணத்தொகை ஒவ்வொரு வருடத்திற்கும் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி பணம் வைப்புச் செய்யப்பட்டுள்ள கணக்குகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி விளையாட்டு மைதானத்துடன் சம்பந்தப்பட்ட "விளையாட்டு அபிவிருத்தி மன்றமொன்று" உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான அமைச்சரவை அங்கீகாரம் எந்த அமைச்சரால், எந்தத் திகதியில் பெறப்பட்டதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

240/ '15

கௌரவ பந்துல குணவர்தன,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) இடர் நிறையளிக்கப்பட்ட முறைக்கமைய இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்கங்களின் போதுமான தன்மை பற்றி திருப்தியடைகின்றாரா என்பதையும்;

(ii) சர்வதேச நாணய நிதியத்தின் இடர் நேர்வு அடிப்படையிலான நிறையேற்றலின் புதிய முறையின் பயன்பாட்டின் போது X, STD, OPL அத்துடன் M2 மாறிகளின் தரவுகளுக்கமைய 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில், மிதக்கும் செலாவணி வீத முறையின் கீழ் வெளிநாட்டு ஒதுக்கங்களின் போதுமாந்தன்மை ஒவ்வொரு ஆண்டு வாரியாகவும் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டில் கடந்த 9 மாத காலத்தில் இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்கங்களின் போதுமாந்தன்மை யாதென்பதையும்;

(ii) மேற்படி நிலையில் தாக்கத்தை ஏற்படுத்திய பிரதானமான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

333/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பல்கலைக்கழகங்களில் கல்விசாரா உப பரிபாலகர்களுக்கென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட லீவுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 912/1 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின்படி 90 நாட்களாகவிருந்த வருடாந்த லீவுகள் 45 ஆகக் குறைக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) மீண்டும் 04/2003 ஆம் இலக்க சுற்றறிக்கையின்படி, சாதாரண அரசாங்க விடுமுறைகள், சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் முழு நோன்மதித் தினம் அடங்கலாக 90 நாட்கள் வரை மேற்படி லீவுகளின் எண்ணிக்கை மாற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், ஏன் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) அரசாங்க ஊழியர்களுக்குரிய லீவுகளும் இவர்களுக்குரிய 90 நாட்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக கருதப்பட்டுள்ளதன் மூலம் மேற்படி ஊழியர்களுக்கு ஏனைய சாதாரண ஊழியர்களுக்குக் கிடைக்கும் வரப்பிரசாதம் இழக்கச் செய்யப்பட்டுள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) சாதாரண அரசாங்க ஊழியர்களுக்குரிய லீவுகளைக் குறைக்காது, பல்கலைக்கழக கல்விசாரா உப பரிபாலகர்களுக்கு லீவு வழங்குவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமையொன்றைத் தயாரிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

351/ ’15

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேற்பதற்கு,— (2)

(அ) (i) லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியினால் ட்ரய்ஸ்டார் அப்பரல் எக்ஸ்போர்ட்ஸ் (தனியார்) கம்பனிக்கு ரூபா 530 மில்லியன் கடன் தொகையொன்று வழங்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அது எந்த அடிப்படையில்;

(iii) இக்கடன் தொகை வழங்கப்பட்டதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேறியுள்ளதா;

(iv) ஆமெனில், அவை யாவை;

(v) இன்றேல், இத்தொகையை அக்கம்பனியிடமிருந்து அறவிடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை;

(vi) இதுவரை செலுத்தப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு;

(vii) செலுத்தப்படாதுள்ள தொகையை அறவிடுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த சனாதிபதித் தேர்தல் காலகட்டத்தில் லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியினால் ரூபா 700 இலட்சம் தொகை ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையியலுக்கு புறம்பாக வழங்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், மேற்படி தொகையை அறவிடுவதற்கான செயல்முறையொன்று உள்ளதா;

(iii) ஆமெனில், அச்செயல்முறை யாது;

(iv) அதன் தற்போதைய நிலைமை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

370/ ’15

கௌரவ ரீ. ரஞ்சித் த சொய்சா,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு பெரும்போகத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட மொத்த ஹெக்ரெயார் அளவு எவ்வளவு என்பதையும்.;

(ii) மேற்படி நிலப்பரப்புக்கு ஏற்ற போதுமானளவு உரம் நாட்டில் இருந்ததா என்பதையும்;

(iii) ஆமெனில், உரப்பற்றாக்குறைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நெற்செய்கைக்கு பயன்படுத்த வேண்டிய ஆரம்ப NPK மேற்பரப்பு உரம் விவசாயிகளால் பெற்றுக்கொள்வதற்கு சந்தையில் இருக்கவில்லை என்பதையும்;

(ii) இரண்டாம் தடவையாக பயன்படுத்த வேண்டிய யூரியா உரத்தைப் பற்றாக்குறையின்றி வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(iii) அதற்கு எவ்வளவு காலம் எடுத்தது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

392/ '15

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2014 ஆம் ஆண்டில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருளாக ஈலியம், ஐதரசன் மற்றும் மின்சாரம் ஆகியவற்றை முழுமையாக பயன்படுத்துகின்றதுமான வாகனங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) ஈலியத்ததை மாத்திரம் பயன்படுத்துகின்ற வாகனங்களை வர்த்தக நோக்கில் சந்தைக்கு அறிமுகப்படுத்தியுள்ள கம்பனிகள் மற்றும் அத்தகைய வாகனங்கள் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டுகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) ஐதரசனை மாத்திரம் பயன்படுத்துகின்ற வாகனங்களை வர்த்தக நோக்கில் சந்தைக்கு அறிமுகப்படுத்தியுள்ள கம்பனிகள் மற்றும் அத்தகைய வாகனங்கள் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டுகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) ஐதரசன் மற்றும் ஈலியத்தை மாத்திரம் பயன்படுத்துகின்ற வாகனங்களின் ஆகக்குறைந்த விலை வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

410/ '16

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பெருந்தோட்டங்களில் தற்போது ஏறத்தாழ 400,000 (நான்கு இலட்சம்) குடும்பங்கள் காணியற்றவர்களாக உள்ளனரா என்பதையும்;

(ii) இவர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிக்கேற்ப உடனடியாக 07 பர்சஸ் காணித் துண்டுகளை மேற்படி குடும்பங்களுக்கு வழங்கி, இக் காணிகளை விற்பனை செய்ய இயலாதவாறான நிபந்தனைகளுக்கு உட்படுத்தி, அவற்றை காணி நம்பிக்கைப்பொறுப்பு ஒன்றின் கீழ் தக்கவைத்து, சம்பந்தப்பட்ட குடும்பங்களில் ஒருவருக்கு அக்காணியின் பின்னுரித்தை வழங்குவதற்கான அனுமதியை வழங்க இயலாதா என்பதையும்;

(iii) மேற்படி காணிகளில் கட்டுமானங்களை தங்களது விருப்பத்திற்கேற்ப மேற்கொள்வதற்கு மேற்படி காணி பெறுனர்களுக்கு வாய்ப்பு வழங்கி, அவ்வாறான கட்டுமானங்களை மாத்திரம் விற்பனை செய்வதற்கான அனுமதியை காணி பெறுனர்களுக்கு வழங்க இயலாதா என்பதையும்;

(iv) இவ்வாறு காணி விற்பனை செய்வதை தடுக்கும் சட்டங்களை விதித்து, எனினும் அதில் மேற்கொள்ளப்படும் கட்டுமானங்களை மாத்திரம் விற்பனை செய்வதற்கு இடமளிப்பதன் மூலம், காணிகளின் விலை உயர்வடையாமல் தடுத்து, தங்களது தேவைகளுக்காக அடகு வைத்தல் போன்ற விடயங்களுக்கு இடமளித்து, காணி விற்பனையை தடுக்கக்கூடியவாறு நடவடிக்கை மேற்கொள்ள இயலாதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இந்தியாவில் நடைமுறையிலுள்ள இவ்வாறான காணி நம்பிக்கைப்பொறுப்புக் கொள்கையின் மூலம் எமக்கு முன்மாதிரியொன்றை பெற்றுக்கொள்ள இயலாதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

111/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தின் பொம்பகெலே ஒதுக்கத்தின் பரப்பளவு யாது;

(ii) அங்குள்ள ஓரிடஞ்சார்ந்த தாவரங்கள் யாவை;

(iii) பொம்பகெலே ஒதுக்கத்தில் வசிக்கின்ற ஓரிடஞ்சார்ந்த விலங்கு வகைகள் யாவை;

(iv) இந்த வனம் ஓர் ஒதுக்கமாக பெயரிடப்பட்ட திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2014.04.14 ஆந் திகதிக்குப் பிந்திய தினமொன்றில் பொம்பகெலே ஒதுக்கத்தில் ஓர் ஏக்கருக்கு மேற்பட்ட பகுதி வெட்டித் துப்புரவு செய்யப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) ஒதுக்கத்தில் உயிர்சார் முக்கியத்துவம் வகிக்கின்ற மேற்பகுதியிலேயே அவ்விதமாக வெட்டித் துப்புரவு செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) இதனால் பாரிய சுற்றாடல் சேதம் ஏற்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) பொம்பகெலே ஒதுக்கத்தில் இந்த அழிவு எவரால் ஏற்படுத்தப்பட்டுள்ளது;

(ii) அது எக்குறிக்கோளுக்காக;

(iii) இந்த காடழிப்புக்கு அனுமதி வழங்கிய உத்தியோகத்தர்கள் இருப்பின் அவர்களின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் மற்றும் பதவிகள் யாவை;

(iv) பொம்பகெலே ஒதுக்கத்தின் அழிவினை தடுத்துநிறுத்த மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

375/ '15

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005-2015 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக் கூட்டத்தில் (General Assembly) கலந்து கொண்ட இலங்கைப் பிரதிநிதிகள் குழுக்களுக்கு,

(i) தலைமை வகித்தவர்கள் யார் என்பதையும்;

(ii) பிரதிநிதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) இவர்களிடையே பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்திருப்பார்களாயின், அவர்களுடைய பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) வெளிநாட்டலுவல்கள் அமைச்சு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) செலவிடப்பட்ட மொத்த பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி செலவு விமானப் பயணங்கள், ஹோட்டல் மற்றும் தங்குமிட செலவுகள் என்றவாறு ஒவ்வொரு தலைப்புக்கமைய வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

395/ '15

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) ஜோர்ஜ் சொரொஸ்,

(i) ஐக்கிய இராச்சியத்தின் திறைசேரிக்கு பவுண் 3.4 பில்லியன் நட்டம் ஏற்படுத்தியதற்கும், ஐக்கிய இராச்சியம் ஐரோப்பிய செலாவணி பொறிமுறையிலிருந்து விலகுவதற்கு செயலாற்றியதற்கும் மற்றும் 1992.09.16 ஆம் திகதி நிகழ்ந்த பவுணின் பாரிய பெறுமதியிறக்கத்திற்கும் பொறுப்புக் கூறவேண்டிய நபராக இனங்காணப்பட்டுள்ளார் என்பதையும்.;

(ii) 1997 ஆசிய நிதி நெருக்கடியை ஏற்படுத்திய ஆளாவார் என அரச தலைவர்களும் பொருளாதார விற்பன்னர்களும் குற்றஞ்சாட்டி உள்ளனர் என்பதையும்;

(iii) 2006 ஆம் ஆண்டில் பிரான்ஸ் உயர் நீதிமன்றத்தினால் பங்குச் சந்தை மோசடி ஒன்று தொடர்பில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளார் என்பதையும்;

(iv) 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் நடைபெற்ற பொருளாதார மாநாட்டில் சிறப்பு அதிதியாக பங்கேற்குமாறு அரசாங்கம் இவரை அழைத்துள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இவ்வாறு மோசாடிகள் புரிந்துள்ள ஒரு நபரை சிறப்பு அதிதியாக அழைப்பது நல்லாட்சி எண்ணக்கருவுக்கு பொருத்தமானதா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

408/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) உயர் நீதி மன்றத்தின் S/C 2008 ஆம் இலக்க மற்றும் 2008.10.24 ஆம் திகதிய வழக்குத் தீர்ப்பின்படி திறைசேரி நானாவித செலவு விடயம் (TMV) மூலம் வழங்கப்படுகின்ற விசேட நிதி ஏற்பாடுகள் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கான மேலதிக நிதி ஏற்பாடுகளாகும். 2008 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரிவு 6(1) அதன்படி திருத்தப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலுள்ள விடயத்தின்படி 2015 ஆம் ஆண்டில் மேலதிக நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்ட அமைச்சுக்கள் யாவை என்பதையும்;

(ii) மேலதிக நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டதன் நோக்கம் ஒவ்வோர் அமைச்சுக்கேற்ப தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) இவ்வாறு வழங்கப்பட்ட மேலதிக நிதி ஏற்பாட்டுத் தொகை ஒவ்வோர் அமைச்சின்படி தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) விசேட செலவு அலகுகளான அதிமேதகு சனாதிபதி, பிரதம அமைச்சர் அலுவலகம் மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் போன்றவற்றுக்கு 2015 ஆம் ஆண்டில் மேலதிக நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தொகை தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

430/ '16

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு ,— (1)

(அ) (i) 2015 சனவரி 05 ஆம் திகதி மாலை இலங்கை துறைமுக அதிகாரசபையின் தொடர்பாடல் மற்றும் பொதுமக்கள் தொடர்பு பிரிவின் பிரதானியின் அலுவலகம் துறைமுக அதிகாரசபையினால் முத்திரை வைக்கப்பட்டதென்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அவ்வாறு முத்திரை வைக்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை;

(iii) அவ்வாறின்றேல், 2010 அம்பாந்தோட்டை "கரதியவர" விழாவுடன் தொடர்புடைய விசாரணையொன்றுக்காக இவ்வலுவலகத்தின் ஆவணக் கோப்புகள் கொண்டு செல்லப்பட்டுள்ளதா;

(iv) இவ்விடயத்துடன் தொடர்புடையதாக, இதற்கு முன்னர் பாரிய அளவிலான ஊழல் மோசடிகளை புலனாய்வு செய்தல் பற்றிய சனாதிபதி ஆணைக் குழுவினால் விசாரணை நடாத்தப்பட்டிருக்கையில் மீண்டும் அக்கோப்புகளை கொண்டு செல்வதற்கான அவசியம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இச்சம்பவம் தொடர்பாக இலங்கை துறைமுக அதிகார சபையின் ஊடக அலகு மூலம் ஊடக அறிவித்தலொன்றை வெளியிடுவதற்கான தேவைப்பாடு யாது;

(ii) அவ்வாறே, இந்த அலகின் பிரதானியூடாகவே இவ்வாறானதொரு சம்பவம் நடைபெறவில்லையென ஊடக அறிவித்தலொன்றை வெளியிடுவதற்கான தேவைப்பாடு யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2016 மே 17, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

114/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ரணவிரு சேவா அதிகாரசபையில் பணியாற்றும் நிரந்தர மற்றும் ஒப்பந்த பணியாட் தொகுதியினர் வெவ்வேறாக எவ்வளவு;

(ii) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் இவ்வதிகாரசபையின் நிரந்தர மற்றும் ஒப்பந்த பணியாட் தொகுதியினருக்கு சீருடை வழங்குவதற்கு செலவு செய்யப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(iii) சீருடை வழங்கப்பட்ட நிரந்தர மற்றும் ஒப்பந்த பணியாட் தொகுதியினரை, ஆண், பெண் என வகைப்படுத்தினால் ஒவ்வொரு வகையிலுமுள்ள ஒவ்வொருவருக்கும் சீருடைக்காக செலவு செய்யப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சீருடைக்காக தெரிவு செய்யப்பட்ட துணி தரம் குறைந்ததென்பதையும்;

(ii) இதன் காரணமாக உத்தியோகத்தர்கள் இவ்வுடைகளை நிராகரித்துள்ளனர் என்பதையும்;

(iii) அதிகாரசபையின் தலைவி எதேச்சாதிகாரமாக செயற்பட்டுள்ளார் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) ரணவிரு சேவா அதிகாரசபையின் சீருடைப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பாரா;

(ii) ஆமெனில் அது எவ்வாறு;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

238/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான GB-2865 இலக்கத்தைக் கொண்ட டிபெண்டர் வாகனத்தை 03 மாத குறுகிய கால பாவனைக்காக பெற்றுக்கொண்ட முன்னாள் அமைச்சரொருவரும் இன்னொரு முன்னாள் அமைச்சரும் 06 ஆண்டுகள் அனுமதியின்றி பயன்படுத்திவிட்டு பின்னர் அதன் நான்கு சக்கரங்கள் உட்பட பல பாகங்களை அகற்றிய நிலையில், வாகன அடிச் சட்டத்தை மாத்திரம் கடந்த 2015 ஆம் ஆண்டு சனாதிபதி தேர்தலின் பின்னர் முன்னறிவிப்பின்றி, இடர் உதவி வண்டியில் ஏற்றிக் கொண்டு வந்து அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் வளவில் கைவிட்டுச் சென்றுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினால் உத்தியோகபூர்வ ரீதியில் GB-2865 இலக்கத்தைக் கொண்ட டிபெண்டர் வாகனம் வழங்கப்பட்டிருந்த அமைச்சரின் பெயர் யாதென்பதையும்;

(ii) மேற்படி வாகனம் அனுமதியின்றி எவ்வளவு காலம் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) இது தொடர்பாக நிறுவன மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி வாகனத்தின் பாகங்கள் அகற்றப்பட்டதால் ஏற்பட்ட நட்டம் எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி நட்டத்தை அறவிடுவதற்கு மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

(vi) மேற்படி அரச சொத்தின் குற்றவியல் கையாடல் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற புலனாய்வின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(vii) இது தொடர்பாக விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

357/ '15

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அகதிகளாக வெளிநாடுகளில் பிரசாவுரிமைக்கு விண்ணப்பித்துள்ள இலங்கையர்கள், இலங்கையர்களாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறானவர்களுக்கு தூதரகங்களால் சேவைகள் வழங்கப்பட வேண்டுமென சுற்றறிக்கையொன்று உள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி சுற்றறிக்கையை நீக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், சுற்றறிக்கையை நீக்குவதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

423/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் அறிக்கையிடப்பட்ட கொலைகள், கற்பழிப்புகள் மற்றும் திடீர் விபத்துக்கள் என்பவற்றின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்.;

(ii) மேற்கூறிய வருடங்களில் திடீர் விபத்துக்களினால் ஏற்பட்ட மரணங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

438/ '16

கௌரவ விஜித ஹேரத்,— சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்காக சிரேஷ்ட பிரசைகள் கொடுப்பனவுக்குப் போதிய நிதி ஏற்பாடுகள் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதா;

(ii) 2015 ஆம் ஆண்டுக்காக வழங்கப்பட்ட பணத்தொகை எவ்வளவு;

(iii) 2016 ஆம் ஆண்டுக்காக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) விண்ணப்பித்துள்ள அனைத்து சிரேஷ்ட பிரசைகளுக்கும் இக்கொடுப்பனவு வழங்கப்படுமா;

(ii) இன்றேல், ஏதேனும் மட்டுப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், அது ஏன்;

(iv) மட்டுப்பாடுகள் செய்யப்படவில்லையாயின், போதிய நிதி ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்து விண்ணப்பிக்கின்ற அனைத்து சிரேஷ்ட பிரசைகளுக்கும் இக்கொடுப்பனவை வழங்க நடவடிக்கை மேற்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

439/ '16

கௌரவ டீ.வீ. சானக்க,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2015 ஆம் ஆண்டில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் கீழ் வழங்கப்பட்டுள்ள நியமனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நியனம் பெறுநர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவு ரீதியாக மேற்படி நியமனங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட முறை தனித்தனியாக எவ்வாறென்பதையும்;

(iv) மேற்படி நியமனங்கள் வழங்கும் போது பின்பற்றப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை யாதென்பதையும்;

(v) ஒவ்வொரு பதவிக்கான ஆட்சேர்ப்பின் போது கவனத்திற்கொள்ளப்பட்ட கல்வித் தகைமைகள் தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் , ஏன்?

442/ '16

கௌரவ பிரசன்ன ரணதுங்க,— அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2014 ஆம் ஆண்டில் லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக செயலாற்றியவர்களின் பெயர்கள் யாவை;

(ii) 2014.01.01 தொடக்கம் 2014.12.31 வரை நடத்தப்பட்ட மேற்படி நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் பங்கேற்றமைக்காக ஒவ்வொரு பணிப்பாளருக்கும் செலுத்தப்பட்டுள்ள கொடுப்பனவுகள் தனித்தனியாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015.01.08 ஆந் திகதி தொடக்கம் இற்றைவரை லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக செயலாற்றுகின்றவர் களின் பெயர்கள் யாவை;

(ii) 2015 ஆம் ஆண்டில் மேற்படி நிறுவனத்தில் நடத்தபட்ட பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை, அவற்றில் பங்கேற்ற பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள் மற்றும் அதற்காக செலுத்தப்பட்டுள்ள கொடுப்பனவுகள் தனித்தனியாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

443/ '16

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உலகில் பல்வேறு நாடுகளிலும் பேணப்பட்டுவரும் இலங்கையர்களுக்குச் சொந்தமான வங்கிக் கணக்குகளின் எண்ணிக்கை யாது;

(ii) இந்த ஒவ்வொரு கணக்கிலுமுள்ள பெறுமதி, ஒவ்வொரு நாடுகளின்படி வெவ்வேறாக எவ்வளவு;

(iii) இக்கணக்குகளின் உரிமையாளர்கள் இலங்கையின் சட்டங்களை மீறி பணத்தை வைப்புச் செய்துள்ளனரா;

(iv) இக்கணக்குகள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பாரா;

(v) ஆமெனில், அது செயற்படுத்தப்படும் முறை யாது;

(vi) இராஜதந்திர மட்டத்தில் மேற்குறிப்பிட்ட அனைத்து கணக்குகளினதும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் உரிய நாடுகளினூடாக கோரிக்கை விடுத்துள்ளதா;

(vii) இன்றேல், ஏன்?

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சுவிட்சர்லாந்தில் HSBC வங்கியிலுள்ள கணக்குகள் தொடர்பாக என்னால் 2015.03.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் வினவப்பட்டதற்கு விடையாக, இது தொடர்பில் செயற்படுவதற்கு நிதிப் புலனாய்வுத் துறையுடன் தொடர்பான சட்டங்கள் திருத்தப்பட வேண்டுமெனவும், அதற்கு அண்மித்த அமைச்சரவைக் கூட்டத்தில் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் கூறப்பட்டதா;

(ii) ஆமெனில், குறித்த சட்டங்கள் திருத்தப்பட்டு அதன் பிரகாரம் இது வரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் அதன் முன்னேற்றம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) இன்றேல், ஏன்?

452/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2014 ஆகஸ்ட் 15 ஆம் திகதி ஐக்கிய அமெரிக்க டொலர் 36,800 என மதிப்பீடு செய்யப்பட்டிருந்த TRJ150W ரக மோட்டார் வாகனங்களின் பெறுமதி 2015 மார்ச்சு 23 ஆம் திகதியளவில் ஐக்கிய அமெரிக்க டொலர் 27944 (யப்பானிய யென் 3,375,000) வரை 8836 டொலர்களினால் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டிருந்த 407 வாகனங்களினால் ஏற்பட்டுள்ள வரி வருமான இழப்பு அண்ணளவாக ரூபா 3000 மில்லியன்களாகும் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த வரி வருமான இழப்பு தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டியவர்கள் யாவர் என்பதையும்;

(ii) அரச வருமானத்திற்கு இவ்வாறானதொரு இழப்பு ஏற்பட்டிருப்பின், அது பற்றி எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

(iii) ஏற்கனவே காணப்பட்ட மதிப்பீடு குறைக்கப்பட்டதன் விளைவாக, தீர்வை வரிச் சலுகை உரிமத்தின் கீழ் இதுவரை நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

457/ '16

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) இலங்கை அரசுக்கும் மாலைதீவு அரசுக்குமிடையில் சிறைக் கைதிகளை பரிமாறிக் கொள்வதற்கென கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் படி மாலைதீவில் சிறை வைக்கப்பட்டுள்ள எம்.எம்.எம். பிஸ்தாம் என்ற நபரை இலங்கையிலுள்ள சிறைச்சாலையொன்றுக்கு மாற்றுவதற்கான கோரிக்கை சம்பந்தமாக (Case File No. 175/2009 - Court No. 194 JC-2009) நீதி அமைச்சின் செயலாளரின் MOJ/L2/2/3/12 ஆம் இலக்க மற்றும் 2014.05.30 ஆம் திகதிய கடிதம் மூலம் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரிடமிருந்து அறிக்கை ஒன்று கோரப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கைதியை இலங்கையிலுள்ள சிறைச்சாலையொன்றுக்கு மாற்றும் செயற்பாடு தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

(ii) அதன் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

470/ '16

கௌரவ காமினீ லொக்குகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) இலங்கையில் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவ மாணவிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்தின் அடிப்படையில் யாதென்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) 2016 ஆம் ஆண்டில் பாடசாலை சீருடை வவுச்சர்களை,

(i) பெற்றுக்கொண்ட மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்தின் அடிப்படையில் எவ்வளவு;

(iii) பெற்றுக்கொள்ளாத மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்தின் அடிப்படையில் எவ்வளவு;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

125/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் காணப்படும் சரக்கு மேடை எழுதுவினைஞர் நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அந்த நிறுவனங்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) அவ்வாறான ஒவ்வொரு நிறுவனத்திலும் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்தையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) சரக்குமேடை எழுதுவினைஞர் நிறுவனங்களின் உரிமப்பத்திரங்களை புதுப்பிக்கும் போது அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய கட்டணங்கள் யாவை என்பதையும்;

(ii) அவ்வாறான ஒவ்வொரு கட்டண வகைகளின் பெறுமதி யாதென்பதையும்;

(iii) மேற்படி (அ) (ii) இல் குறிப்பிடப்படும் நிறுவனங்கள் 2014 ஆம் ஆண்டில் உரிமப்பத்திரங்களை புதுப்பித்த போது செலுத்திய பிணைகளின் பெறுமதி ஒவ்வொரு நிறுவன ரீதியாக தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) மேற்படி பிணை வங்கிப் பிணையா, இன்றேல், காசுப் பிணையா என்பதையும்;

(v) காசுப் பிணையாயின், வைப்புச் செய்யப்பட்ட வங்கி, கணக்கின் உரிமையைக் கொண்டுள்ள நிறுவனத்தின் பெயர் மற்றும் குறித்த கணக்கு நடைமுறை, சேமிப்பு அல்லது நிலையான வைப்புக் கணக்கா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) புதிய பிணைக் கட்டணத் திருத்தம் காரணமாக சரக்கு மேடை எழுதுவினைஞர் நிறுவனங்களுக்கு அநீதி ஏற்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், மேற்படி பிணைக் கட்டணங்களைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எத்தேதியில் என்பதையும்;

அவர் மேலும் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

424/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் கொழும்பு பங்குச் சந்தையின் மொத்த விலைச் சுட்டெண்ணின் வளர்ச்சி வீதமும் தேறிய வெளிநாட்டு கொள்வனவும் தனித்தனியே யாதென்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) கொழும்பு பங்குச் சந்தையில் மொத்த விலைச் சுட்டெண் கடந்த ஆண்டில் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக இலங்கையின் பொருளாதாரம் மற்றும் அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை தொடர்பில் முதலீட்டாளர்களின் நம்பிக்கை தகர்ந்து போயுள்ளது என்பதையும்;

(ii) கொழும்பு பங்குச் சந்தையில் தேறிய வெளிநாட்டு கொள்வனவுகள் கடந்த ஆண்டில் எதிர்மறைப் பெறுமானத்தை அடைந்ததால் இலங்கையின் பொருளாதாரம் மற்றும் அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை தொடர்பில் முதலீட்டாளர்களின் நம்பிக்கை தகர்ந்துபோயுள்ளது என்பதையும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

468/ '16

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில்,

(i) இலங்கை வக்குப் சபையினால் நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) வக்குப் சபையினால் விசாரிக்கப்பட்ட வழக்குகள்/கோரிக்கைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) வக்குப் சபையினால் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகள்/கோரிக்கைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு தனித்தனியாக அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (ii) மற்றும் (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வழக்குகள்/கோரிக்கைகள் சம்பந்தமான இலக்கங்கள் மற்றும் திகதிகள் யாவை என்பதையும்;

(ii) இதுவரை வக்குப் சபையினால் விசாரிக்கப்படவுள்ள வழக்குகள்/ கோரிக்கைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?